# உடலற்ற உயிரின் உறுப்புக்களின் உரையாடல்

ரதன்

## Andrucha Waddingtonம், மூன்றாம் நிலை ஆண்மையக் கருத்தியல் தளமும்

*1960களில் மூன்றாவது நிலை சினிமா இலத்தீன் அமெரிக்க நாடுகளில் உருப்பெற்றது. மூன்றாம் உலகப் பார்வையில் சமூக, பொருளாதாரச் சூழலை, உலகை முன்னிறுத்திப் பார்ப்பதே மூன்றாவது நிலை சினிமா வாகும். அத்துடன் கமரா, எடிட்டிங் போன்ற நவீன தொழில்நுட்பங்களுக்கூடாக காட்சிப் படிமங்களை, குறியீட்டு முறையில் அல்லது மறைபொருளாக, சில சமயங்களில் நேரடியாக (வித்தியாசமான கமரா கோணங்களுக்கூடாக) வெளிப்படுத்தப்படும். 1976இல் வெளிவந்த பிலிப்பைன் படமான Perfumed Nightmare (Dir: Kidlat Tahimik)இல் சிறு கற்களால் கட்டப்பட்ட மிகப் பெரிய வியாபார 'மோல்' வித்தியாசமான கமரா கோணங்களில் காட்டப்படுகின்றது. இது தொழிலாளர்களின் நிலையையும், சிறு வியாபாரிகளின் வெளியேற்ற நிலையையும் சுட்டிக் காட்டுகின்றது. உலகமயமாதலின் கோரத்தை இப்படம் மக்கள் முன் வைத்தது. 1989இல் வெளிவந்த Romero: Dir: John Duigan மூன்றாம் நிலைப் படத்துக்கு மற்றொரு சிறந்த உதாரணம்.*

உள்நாட்டுப் போரின்போது வெளியாகும் படங்கள், இயக்கங்களின் ஆதரவின்றி வெளிவர முடியாது. இயக்கங்கள் பெரும்பாலும் சகல சமூக ஸ்தாபனங்களையும், ஊடகங்களையும் கட்டுப்பாட்டில் வைத்துள்ளன. மறுபுறம் அரசினாலும் கட்டுப்படுத்தப் படுகின்றது. இவற்றைத் தாண்டி இயக்கங்களின் ஆதரவின்றி வெளிவரும் படங்கள் பெரும்பாலும் சர்வதேச சந்தைகளை நோக்கியே வெளிவருகின்றன. இப்படங்களின் நிதியும், கருவும் பெரும்பாலும் இந்தச் சந்தையால் கட்டுப்படுத்தப்படுகின்றன. இவை புத்தி ஜீவி மட்டத்திலேயே பிரச்சினைகளை ஆராய்கின்றன. (உ+ம்: No More Tears – Rajini's Murder) போரின் உக்கிரங் களூடான படங்கள் போரின் பின்னரே புதிய அரசின் ஆதரவுடன் வெளிவருகின்றன. (உ+ம்: வியட்நாம் யுத்தப் படங்கள்)

மூன்றாவது நிலை சினிமாவின், முக்கியத்துவத் தையும், கருத்தியலையும், அரசியல், இயக்க சூழ்நிலை களும், உலகமயமாதலும் கட்டுப்படுத்துகின்றன. இவை உண்மையில் வெளிப்படுத்தப்பட வேண்டிய விடயங் களை வெளிப்படுத்த முடியாமல் உள்ளன. (பிறிதொரு கட்டுரையில் இவை பற்றி விரிவாக பார்க்கலாம்). மூன் றாவது நிலை சினிமாவின் வளர்ச்சிக் கட்டுப்பாட்டுக் காரணிகளிலிருந்து விலகி பிரேசிலிய சினிமா வெளிப்பட்டுள்ளது. இக்கட்டுரையின் நோக்கம், பிரேசிலிய சினிமாவுடன், பெண்ணியப் பார்வையில் யதார்த்தவாத சினிமாவை உண்மைக் கருப்பொருள் களை மையமாகக் கொண்டு படைத்த Andrucha Waddi -ngton இன் படங்களையும் பார்ப்பதே.

பிரேசிலிய சினிமா வளர்ச்சியானது கரடுமுரடா னது. 1970கள் முடியும்வரை வெற்றி நடை போட்ட சினிமாத் தயாரிப்பு நிறுவனங்கள், பின்னர் வங்கு ரோத்து நிலையை அடைந்தன. 1985-1989 வரை பிரேசி லிய அதிபரான José Sarneyஇன் காலத்தில் சினிமாத் தயாரிப்பாளருக்கு வரி விலக்கு போன்ற சலுகைகளை அளித்து உற்சாகப்படுத்தியது.ஆனாலும் 1990 இல் 13 படங்களும், 1993 இல் 3 படங்களும் தயாரிக்கப்பட்டன. முப்பது வருடங்களின் பின்னர் ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட Fernando Collor de Mello (1990–1992)காலத்தின்போதுதான் நிலைமை மோசமடைந் தது.1995-2003வரை ஆண்ட அதிபர் Fernando Henrique Cardosoஇன் ஆட்சியில் மேலும் சலுகைகள் அளிக்கப் பட்டன. அத்துடன் அரச நிதியும் வழங்கப்பட்டது. பொருளாதார உலகமயமாக்கலின் விளைவால் பிரேசி லின் திரைப்படத் தயாரிப்பாளர்களும் சர்வதேச சந்தை களையும், திரைப்பட விழாக்களையும் குறி வைத்து தமது திரைப்படங்களைத் தயாரித்தனர். தேசியம், மற்றும் தேசிய வடிவங்கள், கருத்துக்களுக்கான கவர்ச்சி குறைந்து, சமூக புதிய வடிவங்களுக்கான கருத்துக்கள் வரவேற்பைப் பெற்றன. இதனால் பல படங்களுக்கான தயாரிப்புக்கு சர்வதேச தயாரிப்பு நிறுவனங்கள் நிதி அளித்தன. இதன் விளைவு சில படங்கள் ஆங்கிலத்திலும் (Kiss of the Spider Woman) தயாரிக்கப்பட்டன. 1998இல் பெரும் வெற்றி பெற்றதும், சர்வதேச விழாக்களில் விருதுகளையும் குவித்த Central

# திரை விமர்சனம்

Station படம் Sundance Instituteஇல் தயாரிக்கப்பட்டு Sony and Miramax நிறுவனங்களால் விநியோகிக்கப் பட்டது. கொலம்பியா நாட்டு இணைத்தயாரிப்பான Four Days in September(1997) அமெரிக்காவில் பரவலாக விநியோகிக்கப்பட்டதுடன், ஒஸ்காருக்கும் பரிந்து ரைக்கப்பட்டது. சர்வதேசச் சந்தைகளில் கவர்ச்சிப் பொருளான பொப் இசையை மையமாகக் கொண்டு Rio's Love Songs, Black Orpheus, Nova போன்ற படங்கள் வெளிவந்தன.

ஒரு புறம் சர்வதேசச் சந்தைகளை நோக்கிப் படங்கள் நகர்ந்தாலும், மறுபுறம் உள் நாட்டுப் பிரச்சி னைகளை மையமாகக் கொண்டு பல படங்கள் வெளி வந்தன. உலகமயமாதல் - Savage Capitalism (Dir: José Klotzel), The Machine Gun (Dir: Jorge Furtado), The War of Canudos (Dir: Sergio Rezende), Behind the Sun (Dir: Walter Salles Jr), மற்றும் நகர வன்முறைகளை மைய மாகக் கொண்ட Island of Flowers (Dir: Jorge Furtado) போன்றவை குறிப்பிடத்தக்கவை.

பிரேசிலின் சினிமா வளர்ச்சிக்குப் பல பெண் சினிமா இயக்குனர்களின் பங்களிப்பு காத்திரமானதும், உரமிட் டதுமாகும். Ana Carolinaவின் Mar de rosas (Sea of Roses), Heart and Guts, Dream of a Waltz போன்ற படங்கள் பெண்ணியப் பார்வையில், பெண்களுக்கு எதிரான பாலியல், சமூக வன்முறைகளை பதிவாக் கின. Tizuka Yamasaki இன் Parayba, a Strong Woman, the Roads to Freedom போன்றன தொழில்சார் ஊடகவி யலாளர்கள் மற்றும் வேலைக்குப் போகும் பெண் களுக்கு எதிரான பாலியல் கொடூரங்களை பதி வாக்கின.

பிரேசிலின் சினிமா வரலாற்றில் தொழிலாளர் களுக்கு எதிரான வன்முறைகளை பதிவாக்கிய They Don't Wear Black Tie (Dir: Leon Hirszman), The Hour of the Star (Dir: Suzana Amaral), Hidden City (Dir: Chico Botelho) போன்றன குறிப்பிடத்தக்கவை. இவை பெண் தொழிலாளர்கள், வீதியில் அநாதரவாக விடப்பட்ட சிறுவர்கள், குடியேற்றவாசிகளுக்கு எதிரான முதலா ளித்துவ வர்க்கத்தின் கொடூரங்களையும் வெளிப் படுத்தின.

நான் நீ அவர்கள். (Me You Them - Eu Tu Eles, Dir: Andrucha Waddington)

பிரேசிலின் வட மேற்குப்பிரதேசத்தில் ஓர் குக்கி ராமம். டார்லின் தனது தாயின் மரணவீட்டிற்கு கிராமத் திற்கு வருகின்றாள். வயிற்றில் கருவுடன் கிராமத்தை விட்டுச் சென்ற டார்லின், மீண்டும் வயிற்றில் கருவுடன், கையில் சிறுவனுடன் தாயின் முகத்தை இறுதியாக சந்திக்க வருகின்றாள். அவளது வறுமை, அவளுக்கு ஓசியஸ்சுடன் திருமண பந்தத்திற்கு நிர்ப்பந்திக் கின்றது. திருமணம் ஓர் ஒப்பந்தம். வெகு இலகுவானது. ஓசியஸ் அவள் தங்குவதற்கு வீடு தருகின்றான். டார்லின் ஓசியஸிற்கு சமைத்துப் போடவேண்டும். ஓசியஸ் வயது முதிர்ந்தவன். ஆடு மேய்ப்பவன். பிள்ளை பிறக்கின்றது. பிள்ளை கருப்பு நிறம். ஊட்டச் சத்து குறைவு எனக் கூறுகின்றாள். ஆனாலும் கருப்பு நிறம் நிரந்தரமாகிவிடுகின்றது. இவர்களது வீட்டில் தங்க, தனது வீட்டால் கலைக்கப்பட்ட, ஓசியஸின் ஒன்று விட்ட உறவினனான செசின்ஹோ வருகின்றான். இவனும் ஓசியஸின் வயதை ஒத்தவன். இவனுக்கும் டார்லினுக்கும் உறவு ஏற்படுகின்றது. டார்லின் மீண்டும் கர்ப்பமாகின்றாள். டார்லின் கரும்புத் தோட்டத்திற்கு வேலைக்குச் செல்கின்றாள். மூன்றாவது பிள்ளை பிறக்கின்றது. செசின்ஹோ நன்றாகச் சமைப்பான். இதனால் ஓசியஸ் எதுவும் கூறவில்லை. மீண்டும் கரும்புத் தோட்டத்திற்கு வேலைக்குச் செல்லும் டார்லின், இளைஞனான சைரோவைச் சந்திக்கின்றாள். அவனை அவளது வீட்டில் தங்க வைக்கின்றாள். இவர்களுக்கிடையில் உறவு ஏற்பட்டு, இன்னொரு பிள்ளை பிறக்கின்றது. இப்பொழுது மூன்று கணவன் கள். நான்கு பிள்ளைகள் ஒரே வீட்டில். ஒரு நாள் காலை, புதிதாகப் பிறந்த பிள்ளையையும், ஏனைய பிள்ளை களையும் காணவில்லை. தேடிக்கொண்டிருந்தபொழுது ஓசியஸ் அந்தப் பிள்ளைகளுடன் வீட்டுக்கு வந்து கொண்டிருக்கின்றான். ஓசியஸ் ஒரு பத்திரத்தை டார்லினிடம் நீட்டுகின்றான். அது பிள்ளைகளின் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம். அந்தப் பிள்ளைகள் அனைத்தும் தனது பிள்ளைகள் என ஓசியஸ் அதில் பதிந் துள்ளான்.

இது உண்மைக்கதையை மையமாகக் கொண்டது. Marlene de Silva Saboia என்ற பெண்மணியின் உண்மைக் கதையே இது. இந்த இலத்தீனமெரிக்கப் படத்துக்கான திரைக்கதையை Elena Soarez என்ற பெண் எழுதியிருந்தார். சில வருடங்களுக்கு முன்னர் ரொறன்ரோ சர்வதேச திரைப்படவிழாவில் இப்படம் திரையிடப்பட்டபோது பல மேற்கத்திய விமர்சகர்கள், இது படமாக்கப்பட்ட முறைக்காகப் பாராட்டினார்கள். திரைக்கதையைப் பெரிதாக வரவேற்கவில்லை. காரணம் மூன்று கணவன்மார். மேற்கத்திய கலாச்சாரம் முற்போக்கானது என்று கூறியபோதும் இவர்கள் பெண் கள் விடயத்தில் பிற்போக்கானவர்களே.

இப்படத்திலும் ஆணாதிக்க வெளிப்பாடுகள் சிறப்பாக வெளிப்படுகின்றன. ஆணாதிக்க சமுதா யத்தில் வளர்ந்த ஓசியஸ், தனது மனைவியின் உறவு களை அங்கீகரிப்பதன் காரணம் என்ன? முதலில் டார் லினை வயிற்றில் கருவுடனும், கையில் குழந்தை யுடனும் ஏற்றுக் கொள்கின்றான். தனது வீடு அவளது வீடு எனக் கூறுகின்றான். பின்னர் அதன் விளக்கத்தை கூறுகின்றான் "நீ எனக்குச் சொந்தமானவள், எனவே உனது வீடும் என்னுடையதே". சைரோ வீட்டினுள் வரும் பொழுது, ஓசியஸ் அழுத்தமாக கூறுகின்றான் "இது எனது வீடு, இவள் எனது மனைவி". இவ்வளவு அழுத்தமுள்ள பாத்திரம், இறுதியாக, சகல பிள்ளைகளையும் தனது பிள்ளைகளாக பதிவு செய்வதன் மூலம் தனது ஆணாதிக்க வெளிப்பாட்டை வெளிப்படுத்துகின்றது. இது தியாகமாக வெளிப்ப டலாம், ஆனால், உண்மையில் இதுவும் ஓர் ஆணா திக்க வெளிப்பாடே. அனைத்தும் எனக்கே சொந்தம் என்பது.

கதாசிரியர், இவற்றையெல்லாம் மீறி டார்லினை தனது மூன்று கணவன்மாருடனும் தொடர்ந்து சேர்ந்து

வாழவைக்கின்றார்.

பாலச்சந்தர் தனது படங்களில் மரபை மீறிய உறவுகளைக் காட்டிவிட்டு, மரபு - கலாச்சாரம் மிக முக்கியமானது எனக்கூறி, இந்த உறவுகளை உடைத்து விடுவார். மிக அண்மையில் வெளி வந்த 'பச்சைக்கிளி முத்துச்சரம்' என்ற படத்தில் வேறு பெண்ணுடன் கண வனுக்கு ஏற்படும் நட்புக்கு, சுகயீனமுற்ற பிள்ளைக் காக உடலுறவை மறுத்த மனைவி காரணம் எனக் காட்டப்படுகின்றது. இவ்வாறு பெண்கள்மீது மரபையும் கலாச்சாரத்தையும் திணிக்கின்றார்கள் படைப் பாளிகள். ஜெயகாந்தனின் 'சினிமாவுக்குப் போன சித்தாளு'வில் பிரபல நடிகனை நினைத்து உறவு கொள்ளும் மனைவியைப்பற்றி கூறுகின்றார். எத்தனை கணவன்மார் நடிகைகளை நினைத்து மனைவிகளுடன் உறவு கொள்கின்றனர். ஆனால் அதனைப்பற்றிய பதிவுகள் எதுவும் இல்லை

தர்மசிறி பண்டாரநாயக்கவின் 'சுத்திலாகே கத் தாவ' (சுத்தியின் கதை) என்ற படத்தில் கணவன் சிறைக்குச் சென்ற பின்னர் தனது வயிற்றை நிரப்ப வேறு ஆண்களுடன் உறவு கொள்கின்றாள் சுத்தி, பின்னால் தனது கணவனாலேயே கொலை செய்யப் படுகின்றாள். பிரசன்ன விதானகேயின் 'பௌரு வலலு' படத்தில் வயலட்டின் முதல் மகள் திருமணமாகி விடு கின்றாள், மற்றவளுக்குத் திருமண வயது. இந்நிலை யில் தனது முன்னாள் காதலனுடன் உறவு ஏற்பட்டு வயிற்றில் கருவைச் சுமக்கும் வயலட், தனது கரு பாவத்தின் சுமை என நினைக் கும் அளவிற்கு, சமுதாயம் அவளை விமர்சிக்கின்றது. பிரசன்ன சமூகத்தை எள்ளி நகையாடுகின்றார். பிரசன்ன மிக வித்தியாசமான படைப்பாளி, துணிச் சலுடன் சமூகத்தை விமர்சித்துள்ளார்.

அபர்ணா சென் தனது 'பரோமா' படத்தில் தனது காதலனுக்காகக் காத்தி ருக்கும் மனைவியைக் காட்டுகின்றார். அபர்ணா பெண் படைப்பாளி. அதனால் பெண் மீதான அக்கறையுடனும் துணிச்ச லுடனும் பரோமாவைப் படைத்துள்ளார்.

Nirontor (Forever Flows) என்ற பங்களா தேஷ் படம் - கடந்த வருடம்(2006) ஒஸ்கா ருக்கு அனுப்பப்பட்டது. ரீதியின் குடும்பம் பங்களாதேஷின் தலைநகரான டாக்காவில் வாழும் நடுத்தரக் குடும்பம். ரீதியின் தகப்பனார் வேலை செய்ய முடியாத நிலை யில் உள்ளார். அவளது தம்பியார் வேலை யற்றவர். குடும்பம் அவளது உடலழகில் தங்கியுள்ளது. பாலியல் தொழிலாளியாக வேலை பார்க்கும் ரீதி குடும்ப பாரத்தைச் சுமக்கின்றாள். அவளது தம்பி கீரு உண வகம் வைத்து நடாத்த விரும்புகின்றார். அதற்கான பணத்தையும் ரீதியே கொடுக் கின்றாள். கீருவின் உணவகம் சிறப்பாக முன்னேறுகின்றது. கீருவின் மனைவி மேலும் படிக்க விரும்புகின்றாள். இப்பொழுது ரீதி யின் உழைப்பு குடும்பத்திற்கு தேவையில்லை. அவளது உழைப்பைக் குடும்பம் எதிர்பார்க்கவில்லை. அவளது வாழ்வு எந்தப் பாதையில் நகரப்போகின்றது என்பதை அவளே தீர்மானிக்க முடியாமல் உள்ளது.

ரீதியின் தாயார், ரீதியின் தோளைத் தொட முற்படும் பொழுது, "என்னைத் தொடாதே, உனது தொடுதல் எனக்கு, எனது வாடிக்கையாளரையே நினைவுபடுத்து கின்றது" எனக் கூறுகின்றாள். இதுவே ரீதியின் வாழ்வின் உக்கிரத்தையும், அவளது அகவலியையும் சுட்டி நிற்கின்றது. அவளது இந்த வாழ்விற்கு, அவளது குடும்பமும் காரணம். அவளது விசாரணைகள் தொடுத லிருந்து ஆரம்பிக்கின்றன. தனிமனித ஒழுக்கமும், சமூக ஒழுக்கமும் ஒன்றிலொன்று தங்கியிருக்கின்றன. ஆண்களின் கோட்பாட்டியலில்தான் சமூகக் கோட்பா டுகள் தங்கியுள்ளன. இவைதான் ஒழுக்க நெறிமுறை களைத் தீர்மானிக்கின்றன. உனது நித்திரையையும் தீர்மானிப்பது நான்தான். உனது உடலற்ற வாழ்வுதான் சமூக ஒழுக்கமும், எமது வாழ்வும் என ஆண்கள் குரலெ முப்புகின்றனர். அபூ சயிட் சிறப்பாகத் தனது விசார ணைகளைத் தொடர்கின்றார். இவை சில மூன்றாம் நிலைப் பெண்ணிய சிந்தனைவாத படங்களுக்கு உதாரணங்களாகும்.

இங்கும் (நான் நீ அவர்கள்) டார்லினின் வாழ்க்கை நேரடியாக காட்டப்படுகின்றது. எதுவும் ஒளித்து வைக்கப்படவில்லை. டார்லினுக்கு எந்தக் குற்ற உணர்



வும் இல்லை. இயல்பாகவே உள்ளாள். செசின்ஹோ விடம் (இரண்டாவது கணவன்) சென்று சைரோ தங்குவதற்கு அறை கட்டித் தருமாறு கேட்கின்றாள். அத்துடன் தனக்கும் சைரோவுக்கும் உள்ள உறவைப் பற்றியும் கூறுகின்றாள். பார்வையாளரிடம் இந்த உணர்வு வெகு யதார்த்தமாகக் கொண்டு செல்லப் படுகின்றது. ஒரு பெண் கதாசிரியரால்தான் இது முடியும். அவளது பாத்திரக் கூறுகள் முக்கியமானவை. திரு மணம் தனது வறுமைக்கே. குறிப்பாக, தனது இரு கருக் களுக்காக. பின்னால் குடும்பத்துக்காக உழைக் கின்றாள். பின்னர், தனது புதிய கணவனுக்காகத் தங்கு வதற்கு இடமும் குடும்பமும் ஏற்படுத்துகின்றாள். இவள் ஓர் சுமைதாங்கியாகச் செயற்படுகின்றாள். ஒவ்வொரு கணவனிடமும் ஒவ்வொன்று உண்டு. ஒருவனிடம் காசு, மற்றவனிடம் பாசம், உழைப்பு, மற்றவனிடம் நவீனத்துவம்.

சிறந்த படங்களுக்கு வழிகாட்டி. தனி நபர், சமூக மரபுகள், ஒழுக்கங்கள் மீதான விமர்சனங்களை வைக்கின்றன. கேள்வி கேட்கின்றன. ஆண்களின் உடல் உறவுக்கும், அதிகாரத்துக்குமான தொடர்பு கள், அரசியல் சக்திகளுக்கு சமூகத்தின் மீதான அக்கறை போன்றவற்றின் மீதான தொடர்ச்சியான விமர்சனங்கள், எதிர்-முரண் நிலைமீதான கருத்தியல்கள், குற்ற உணர்வுகள் மீதான பார்வைகள் இவற்றையெல்லாம் தாங்கி படைப்புக்கள் வெளிவருகின்றன. இந்த விமர்சனவியலே இன்றைய சினிமாவின் தேவை.

The House of Sand - Brazil – Portuguese -2006:

இது Andrucha Waddingtonஇன் இரண்டாவது படம். எங்கும் மணல். எந்தப்பக்கம் திரும்பினாலும் மணல் மேடுகள். குனிந்தால் மணல், நிமிர்ந்தால் மணல்.



ஓசியஸ் எனது கணவன் என டார்லின் அழுத்திக் கூறுகின்றாள். ஓசியஸ் அவளுக்குச் சொந்தமானவன். அதேபோல் ‘குஞ்சை அடை காப்பதுபோல்’ தனது மற்றைய இரு கணவன்மாரையும் காக்கின்றாள். மீண் டும் தாய்வழிச் சமுதாய முறைக்குச் சென்று விட்டோம் என நினைக்கத் தோன்றுகிறது. வெகு தூரத்தில் இல்லை தாய்வழிச் சமுதாய முறை.

டார்லினாக நடித்த Regina Casé பிரேசிலின் பிரபல அழகி. படத்தில் அவரது அழகைப் பார்க்க முடியாது. அவரது சுமையைத்தான் பார்க்க முடியும். அவளது மனஅழுத்தங்களின் வித்தியாசமான பரிமாணங் களைத்தான் காணலாம். படத்தின் மையமாக இவர் இருந்தபொழுதிலும், இவர் படைப்பு எந்த வணிகத் தன்மைகளையும் கொண்டிருக்கவில்லை.

இலத்தீனமெரிக்கப் படங்கள் இன்று உலகின்

மணல், மணல், மணல், அந்தப் பாலைவனத்தில் முகில் கூட்டங்களும், சூரியனும் அதிகப்படியாகக் காணக் கிடைக்கக் கூடியவை. அந்த அனல் பிரதேசத்தில் Vasco de Sa (Ruy Guerra) தனது குழுவுடனும், தனது கர்ப்பமுற்ற மனைவியுடனும், மனைவியின் தாயாரு டனும் வாழ்கின்றார். வாழ்கின்றார் என்பதை விட அந்த மேட்டுப் பிரதேசத்தை வாங்கியுள்ளார். அங்குள்ள பலரும் அங்கு வாழ விரும்பவில்லை. ஆனால் வஸ்கோ பிடிவாதமாக உள்ளார். அவருடன் உடன் இருந்தவர் கள் ஒரு இரவில் ஓடி விட்டனர். இப்பொழுது இவரும், மனைவியும், மாமியாரும் மாத்திரம்தான். இவரும் அப் பொழுது நடைபெற்ற சிறு விபத்தில் இறந்து விடுகின் றார். தனித்த அந்தப் பாலைவனத்தில் இப்பொழுது தாயும் மகளும்தான். இது நடைபெற்றது 1910இல் பிரேசிலின் வட கிழக்குப் பிரதேசத்தில். இப்பொழுது

கற்பனையில் பாருங்கள். 1910, பாலைவனம், தனித்து இரு பெண்கள். அந்தத் தனிமையையும், கொடூரத்தையும், பயத்தையும் உணர்வீர்கள். அந்தப் பாலைவனத்தைச் சுற்றிச்சுற்றி வந்துள்ள கமரா இந்தக் கொடூரத்தை உணர்த்தியுள்ளது. இவர்கள் ரியோவுக்குத் தப்பிச் செல்லவேண்டும் என்ற கனவு கனவாகவேயாகிவிடுகின்றது.

காலம் கரைகின்றது. இப்பொழுது 1919ம் ஆண்டு. வஸ்கோவின் மனைவி ஓரியாவிற்கு, மரியா என்ற மகள் பிறந்து 9 வயதாகின்றது. இவர்களுக்கு அருகில் (சுமார் 4 மணித்தியால நடைதுாரத்தில்) உள்ள அடிமை வாசிகள்தான் இவர்களது நண்பர்கள். ரியோவில் இருந்து ஒரு குழு வந்து தங்கியிருப்பதாக இவர்களில் ஒருவனான மாசு கூறுகின்றான். சுமார் இரண்டு நாட்கள் நடந்து சென்று இவர்கள் இருப்பிடத்தை அடைகின்றாள் ஓரியா. இவர்கள் ஆடிப்பாடிக் கொண்டிருக்கின்றனர். முதன்முறையாக இசையைக் கேட்டவுடன் ஓரியாவின் கண்களில் இருந்து கண்ணீர் வருகின்றது. அவர்கள் மே மாதம் 19ம் திகதியன்று சூரிய கிரகணத்தைக் காண வந்துள்ள விஞ்ஞானிகள். இவர்களுக்குப் பாதுகாப்பாக ஓர் இராணுவ வீரனான லூயிசும் உள்ளான். ஓரியாவுக்கும், அவனுக்கும் நட்பும் உறவும் ஏற்படுகின்றது. ஓரியா, லூயிஸ்மூலம் ரியோ செல்ல லாம் என நம்புகின்றாள். அவள் திரும்பி வரும்பொழுது ஓரியாவிற்கு பெரும் அதிர்ச்சி காத்திருக்கின்றது. அவளது தாயார் இறந்து விட்டார். ஓரியா ஏற்கனவே ரியோவிற்கு செல்வதற்காக ஏற்பாடு செய்திருந்த வண்டிக்காரன் சென்று விடுகின்றான். இறுதியாக நம்பியிருந்த இராணுவ வீரனான லூயிசும் ஓரியாவை விட்டு விட்டுச் சென்று விடுகின்றான். இப்பொழுது ஓரியாவுக்கும் மாசுவிற்குமான நட்பு அதிகரிக்கின்றது.

இப்பொழுது 1942. உலக மகாயுத்தம் நடைபெறுகின்றது. அமெரிக்கச் சண்டை விமானங்கள், ஜேர்மனி விமானங்களைக் கண்காணிக்கும் நோக்குடன் இப்பகுதியில் ரோந்தில் ஈடுபடுகின்றன. மரியா குழப்பமுற்றவளாகக் காணப்படுகின்றாள். அடிக்கடி குடிக்கின்றாள். இப்பொழுது வயது முதிர்ந்த இராணுவ அதிகாரி லூயிஸ் இவர்கள் இருப்பிடத்தைக் கண்டுபிடிக்கின்றான். லூயிசுடன் மரியா ரியோவுக்கு செல்கின்றாள்.

1969ம் ஆண்டு ஓரியாவிடம் திரும்பும் மரியா, ஓரியாவிற்கு ஓர் ஒலிப்பதிவு நாடாக்கருவியை கொடுக்கின்றாள்.

கடந்த ஆண்டு ரொறன்ரோ சர்வதேச திரைப்பட விழாவில் திரையிடப்பட்ட இப்படத்தில் பிரதான பாத்திரத்தில் நடித்த நடிகைகள் படத்தில் மூன்று, இரண்டு பாத்திரங்களில் நடித்துள்ளனர். தமிழுக்கு இது புதிதல்ல. எம்.ஜி.ஆர், சிவாஜி ஒரே நேரத்தில், ஒரே காட்சியில், தனயன் - தந்தையாக, அண்ணன்-தம்பியாக நடித்துள்ளனர். இங்கு சற்று வித்தியாசமானது என்னவென்றால், முதலில் தாயாக Fernanda Monte-negroவும், மகள் ஓரியாவாக Fernanda Torresஉம் நடித்துள்ளனர். பின்னர் ஓரியாவுக்கு வயது முதிர்ந்த பின்னர் ஓரியாவாக Fernanda Montenegroவும் ஓரியாவின் மகளுக்கு வயது முதிர்ந்து பாட்டியானபோது மீண்டும் Fernanda Monte-negroவும் நடித்துள்ளனர்.

அதேபோல் முதலில் ஓரியாவாக நடித்த Fernanda Torres பின்னர், ஓரியாவின் மகள் மரியாவாகவும் நடித்துள்ளனர். ஒளிப்பதிவுக் கருவிக்குப் பின்னால் மாத்திரமல்ல, நிஜத்திலும், இவர்கள் தாயும் மகளுமாகும். அத்துடன் மகள் Fernanda Torres இப்பட இயக்குனரின் மனைவியுமாவார். இந்த முயற்சி சற்று வித்தியாசமாக இருந்த போதிலும், வயது முதிர்ந்த பாத்திரங்களில் ஒரே நடிகைகள் நடித்தமையினால் வெவ்வேறு பரிமாணங்களைக் கொண்டு வரமுடியவில்லை.

பெண்களின் உறுதியை வெளிக்கொணர்ந்திருக்கும், இப்படத்தின் கதையும் களமும் உலக சினிமாவுக்குப் புதிது. சிந்தித்துப் பாருங்கள் 60 ஆண்டுகள் நகரத்துக்குப் போகும் முயற்சிகள் எல்லாம் தோல்வி. சந்திரனில் இறக்கிவிட்ட மனிதர்கள் போல், வானத்தையும், கதிரவனையும், மணலையும் ஒரு சில மனிதர்களையும் பார்த்து வாழ்ந்த பெண்கள். இறுதியில் ஓரியா உறுதியுடன் அப்பிரதேசத்திலேயே தீர்மானமாக வாழ்கின்றாள்.



இவர்களுக்கருகில் தப்பியோடி வந்து வாழ்ந்து கொண்டிருக்கும் கறுப்பின அடிமைவாசிகளில் ஒருவனான மாசு. இவன் ஒரு வேலைக்காரனுக்கும், கணவனுக்குமிடைப்பட்ட வாழ்க்கையை ஓரியாவுடன் வாழ்கின்றான். ஓரியாவின் முடிவுகளில் இவனது கருத்துக்கள் இருப்பதில்லை. ஓரியாவின் முடிவே முடிவானது.

இவர்களுக்கு ஏற்பட்ட நிலைதான் இன்று உலக முழுவதும். விரக்தியின் எல்லையில் சுதந்திரத்தைத் தேடி, பசிக்கு உணவு தேடிப் பின்னர் இதுதான் வாழ்வு என்ற மனப்பக்குவத்துக்கு வந்துவிடுவோம். ஆணை மையமாகக் கொண்ட இவ்வுலகில் ஓரியாவின் சுதந்திர உணர்வு ஒடுக்கப்பட்டு, அவளது அடையாளங்கள் நசுக்கப்பட்ட நிலையில் ஓரியா தனது வாழ்வைத் தானே தனது பரிமாணங்களுக்குட்பட்ட நிலையில்

jpiu tpku;rdk;

தீர்மானிக்கின்றாள். இறுதியில் ஓரியாவுக்கு ரியோவுக்கு செல்ல சந்தர்ப்பம் கிடைத்தும் அவள் செல்லவில்லை. இது அவளது விரக்தியின் வெளிப்பாடா? இல்லையேல், அவளது உறுதியின் வெளிப்பாடா? மரியா இறுதியில் தாயுடன் மீண்டும் இணைவது இன்றைய வாழ்வில் பெண்களின் நிலையை சிறப்பாக எடுத்துக் காட்டியுள்ள சிறந்த முயற்சி.

இப்படத்தின் திரைக்கதையாசிரியர் ஓர் பெண்மணியாவார். பெண்கள்பற்றிய அறிவுசார் நிலைகளை மதீப்பீடு செய்கின்றார். உங்களது இயக்கத்துக்கும், உங்களைச் சுற்றியுள்ளவர்களின் இயக்கத்தால் ஏற்படும் சார்பான, எதிரான இயங்குதலுக்கும், இவை தவிர்ந்த புறநிலைக் காரணிகளால் ஏற்படும் தாக்கங்களுக்கும் ஏற்ப சமநிலையை ஏற்படுத்த வேண்டும். இந்த இயங்கியலை திரைக்கதையாசிரியர் அபத்தவகையான திரைக்கதையாக சிறப்பாக எழுதியுள்ளார். பெண் பாத்திரங்களின் உள்ளுணர்வுகளைத் துருவித்துருவி ஆராய்கின்றார்.

இப்படத்தின் ஒளிப்பதிவும் பின்னணி இசையும் குறிப்பிடத்தக்கது.

இவ்விரு படங்களும் நவயதார்த்தவாதப் படங்கள். இவை பெண்ணிய மேலாதிக்கத்தை சுட்டிக் காட்டி நிற்கின்றன. ஓரியா தனது பாலியல் சுதந்திரத்தைத் தானே தீர்மானிக்கின்றாள். 'நான் நீ அவர்' களில் டார் லின் தனது கணவன்மார்களையும் அவளே தீர்மானிக்கின்றாள். வழமைக்கு மாறாக, தந்தைவழி சமூக அமைப்புக்கு எதிராக செயல்படும் பாத்திரங்கள். தங்களது நிலையைத் தாங்களே தீர்மானிக்கின்றன. மனித விழுமியங்களான கௌரவம் போன்றனவற்றின் பிரதிநிதிகளாவும் அவர்களே உள்ளார்கள்.

அறிவார்ந்த அடிப்படையில் மரபு, பாலியல் விழுமியங்களையும், சமூக மரபுகளையும் உடைத்தெறிகின்றார் இயக்குனர். குறிப்பாக திரைக்கதை பெண்ணினால், பெண்ணிய மொழியில் படைக்கப்பட்டுள்ளது. இது இப்படங்களின் மிகச் சிறப்பான அம்சமாகும். இது இயக்குனரின் சமூக நோக்குடன், ஆண்களால் எழுப்பப்பட் டுள்ள தளத்தை சமநிலை நோக்கி திசை திருப்பும் நல்லெண்ணத்தையும் வெளிப்படுத்துகின்றது. இயக்குனரின் உள்ளுணர்வும், அனுதாப உணர்வில்லாத தனது குற்ற உணர்வும், நுட்பமான காட்சிப் படிமங்களுக்கூடாக வெளிப்பட்டுள்ளன.

மனித உறவுக்கும், வரலாற்றுக்கும், சமூகக் கட்டமைப்புக்கும், அதிகாரங்களின் வளர்ச்சிக்குமான தொடர்பியலை முன்வைத்து, ஆண்களால் இவைக்கு இணைவாக எழுப்பட்டுள்ள கருத்தியலை இப்படங்கள் விமர்சிக்கின்றன. இப்படங்கள் சமூகத்தளத்தின் திசைகளைத் திருப்பியுள்ளன.

☯

---

## நூல் அறிமுகம்

### SRILANKA: Reign of Anomy
### by Charles Ponnuthurai Sarvan
### Centurion Media

'இலங்கை: சீரழிவு ராச்சியம்' என்ற பேராசிரியர் சார்ள்ஸ் பொன்னுத்துரை சர்வன் அவர்களின் ஆங்கில நூல் வெளியாகி இருக்கின்றது. 1958இல் நடந்த கலவரத்துக்குப் பின்னர் இலங்கையை விட்டகன்று தொடர்ச்சியாக புகலிடத்தில் வாழும் சர்வன் அவர்கள் ஆங்கில இலக்கியத் துறை சார்ந்தவர்.

ஆனாலும் இலங்கை அரசியலின் வரலாற்றினைத் தொடர்ச்சியாகத் தேடி வந்ததினதும் மிகப் பரந்த வாசிப்பினதும் பெறுபேறாகவும் சுமார் 90 பக்கங்கள் கொண்ட இந்த நீள்கட்டுரை நிறையத் தகவல்களைத் தன்னகத்தே கொண்டிருக்கிறது.

இலங்கையின் எரிந்து கொண்டிருக்கும் இன்றைய பிரச்சினைகளுக்கான காரணிகளை சரித்திரங்களில், இலக்கியங்களில், மற்றும் மனித வெளிப்பாடுகளில், கடிதங்களில், சொந்த உரையாடல்களில் வெளிப்படுகின்ற கூறுகளில் இருந்து கண்டு கொள்ளத் துணிகிறது. ஆசிரியரின் மிகப் பரந்த நூல்களினுடனான பரிச்சயம் இந்த நூலின் ஒவ்வொரு பக்கங்களிலும் வெளித் தெரிகிறது. இந்நூல் அவசியம் சிங்களத்திலும் தமிழிலும் வெளிவந்தால் சாமான்ய மக்களையும் சிந்திக்கத் தூண்டுவதாக அமையும் எனலாம்.




கிடைக்குமிடம்:
Nadarajah Straube
Brunsbütteler Damm 21
13581 Berlin
Germany

cnsusee@yahoo.de